முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்.

அ.வ.எண். **: 690/2022, 221/2024**

பி.வா.சா **: 1**

பெயர் **:** சின்னசாமி

தந்தை பெயர் **:** சின்னராசப்பகவுண்டர்

வயது **: 73**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சனிகிழமை 9 ம் நாள், ஷ நீதிமன்றம் அ.வ எண். 690/2022 ல் இ.ம எண்.9/2025 ல் என்னை நீதிமன்ற ஆணையராக நியமித்து பிறப்பித்த உத்தரவின் படி பல்லடம் வட்டம், ஆறுமுத்தாம்பாலையம் கிராமம், ராயர்பாளையம், மெஜஸ்டிக் சர்க்கில், மளிகை வீதி தெற்கு, கதவு எண்.2-1004 சி65-ல் தற்போது வசித்து வரும் சின்னராசப்பகவுண்டர் மகன் 73 வயதுள்ள சி.சின்னசாமி பி.வா.சா.1 என்பவரின் விசாரனை பதிவு செய்யப்படுகிறது.

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் **: 10.51am** முதல் **02.38pm** வரை.

முதல் விசாரணை**:**

நான் ஆ.வ எண்.690/2022 ல் வாதியாவேன். நான் இன்று (09.08.2025) தாக்கல் செய்துள்ள எனது பிரமாண வாக்குமூலத்தை சாட்சியத்தின் ஒரு பகுதியாக வாசித்துகொள்ள வேண்டுகிறேன். 26.08.1942 காளியப்பகவுண்டர் மக்கள் பெரியராச கவுண்டர், சின்னராசப்ப கவுண்டர் பெற்ற கிரையபத்திரம் சான்றிட்ட நகல் (ஆவண எண்.2022/1942) பி.வா.சா.ஆ**.1, 27.09.1967** கந்தசாமி கவுண்டர் மற்றும் சின்னராசப்ப கவுண்டர் செய்து கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் அசல் (ஆவண எண்.1573/1967) பி.வா.சா.ஆ**.2, 18.06.1998** நாச்சப்பன் பெயருக்கு சின்னராசப்ப கவுண்டர் எழுதிவைத்த உயில் பத்திரம் சான்றிட்ட நகல் (ஆவண எண்.96/1998) பி.வா.சா.ஆ**.3, 10.12.2002** சின்னராசப்ப கவுண்டர் எழுதிய மேற்படி உயில் ரத்து பத்திரம் சான்றிட்ட நகல் (ஆவண எண்.235/2002) பி.வா.சா.ஆ**.4**, **10.10.2008** நாச்சப்பனுக்கு சின்னராசப்ப கவுண்டர் எழுதி கொடுத்த உயில் பத்திரம் சான்றிட்ட நகல் **(**ஆவண எண்.**263/2008)** பி.வா.சா.ஆ**.5, 10.10.2008** நாச்சப்பனுக்கு சின்னராசப்ப கவுண்டர் எழுதி கொடுத்த உயில் பத்திரம் சான்றிட்ட நகல் (ஆவண எண். 264/2008) பி.வா.சா.ஆ**.6,** 10.10.2008 நாச்சப்பனுக்கு சின்னராசப்ப கவுண்டர் எழுதி கொடுத்த உயில் பத்திரம் சான்றிட்ட நகல் (ஆவண எண்.265/2008) பி.வா.சா.ஆ**.7,** 09.12.2009 நாச்சப்பனுக்கு சின்னராசப்ப கவுண்டர் எழுதி கொடுத்த உயில் பத்திரம் சான்றிட்ட நகல் (ஆவண எண்.8/2010) பி.வா.சா.ஆ**.8,** 21.10.2010 நாச்சப்பன் மைதிலி பெயருக்கு எழுதி வைத்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் (ஆவண எண்.14981/2010) பி.வா.சா.ஆ**.9, 17.11.2011** நாச்சப்பன் சரஸ்வதி, தமிழ்செல்வன் பெயருக்கு எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் (ஆவண எண்.22706/2011) பி.வா.சா.ஆ**.10,** 07.11.2019 மாணிக்கம், பழனிசாமி ஆகியோருக்கு தமிழ்செல்வன் எழுதிகொடுத்த கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் (ஆவண எண்.14478/2019) பி.வா.சா.ஆ**.11, 09.10.2020** சஞ்சய் அகர்வால்க்கு தமிழ்செல்வன் எழுதிகொடுத்த கிரய பத்திரம் சான்றிட்ட நகல் (ஆவண எண்.11099/2020) பி.வா.சா.ஆ**.12, 02.09.2021** விக்ரம்குமாருக்கு தமிழ்செல்வன் எழுதிகொடுத்த கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் (ஆவண எண்.12542/2021) பி.வா.சா.ஆ**.13,** 15.09.2021 விக்ரம்குமாருக்கு தமிழ்செல்வன் எழுதிகொடுத்த கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் (ஆவண எண்.13345/2021) பி.வா.சா.ஆ**.14, 02.09.2021** வினோத்குமாருக்கு தமிழ்செல்வன் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் (ஆவண எண்.12543/2021) பி.வா.சா.ஆ**.15, 02.09.2021** தமிழ்செல்வனுக்கு ஆர்.மாணிக்கம், பழனிசாமி எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் (ஆவண எண்.12425/2021) பி.வா.சா.ஆ**.16, 11.11.2021** வினோத்குமாருக்கு விகரம்குமார் எழுதிகொடுத்த கிரய பத்திரம் (ஆவண எண்.17002/2021) பி.வா.சா.ஆ**.17,** 04.02.2022 தமிழ்செல்வனுக்கு சரஸ்வதி எழுதிகொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் (ஆவண எண்.2194/2022) பி.வா.சா.ஆ**.18, 12.10.2022** பட்டா எண்.1614, கணிணி பட்டா சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ**.19, 12.10.2022** பட்டா எண்.1894, கணிணி பட்டா சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ**.20, 12.10.2022** பட்டா எண்.807, கணிணி பட்டா சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ**.21, 12.10.2022** பட்டா எண்.1893, கணிணி பட்டா சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ**.22,** சின்னசாமி பெயரில் உள்ள வீட்டு வரி ரசீதுகள்

(எண்ணிக்கை 10) பி.வா.சா.ஆ.**23** வரிசை, சின்னசாமி பெயரில் உள்ள குடிநீர் வரி ரசீதுகள் (எண்ணிக்கை 8) பி.வா.சா.ஆ.**24** வரிசை, 01.08.2025 வாதி சின்னசாமி பெயரில் உள்ள குடிநீர் 11.10.2021 முதல் 01.08.2025 வரை மின் கட்டணம் செலுத்தியதற்கான இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல். (எண்ணிக்கை 12) (மின் இணைப்பு எண்.03225001683) பி.வா.சா.ஆ.**25.**

அசல் வழக்கு **609/2022** ல் **1,2,6** மற்றும் **7** பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரனை**:-**

தாவா சொத்துகள் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். நான் தான் எனது தகப்பனாருக்கு மூத்த மகன். என் தகப்பனாருக்கு 5 ஆண் மக்கள் 4 பெண் மக்கள் என்றால் சரிதான். எனக்கு 1977 ல் திருமணமானது. 1979 ல் எனக்கு எனது தகப்பனாருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது என்றால் சரிதான். எங்கள் உறவினர்கள் செல்லப்பன் மற்றும் பரமசிவம் ஆகியோர் முன்னிலையில் சமரசம் பேசி 2 ஏக்கர் 7 ½ செண்ட் பூமி எனக்கு ஒதுக்கிவிட்டார்கள். கணபதிபாளையம் கிராமத்தில் க.ச. 218/5 காலையில் 0.45 செண்ட், க.ச.573 காலையில் 1 ஏக்கர் 17 ½ செண்ட், க.ச.572/1 காலையில் 0.40 செண்ட், க.ச.575 காலையில் 5 செண்ட் ஆகிய பூமிகள் எனது தகப்பனார் எனக்கு கொடுத்தார். மீதமுள்ள பூமிகளை பின்பு பிரிக்கும் பொழுது தருவதாக கூறினார். எனது தகப்பனார் 11.05.2010 தேதியில் இறந்தார். எனக்கு என் தகப்பனார் பிரித்து கொடுத்த பூமிகளை பொருத்து எனது சகோதரர்கள் சம்மதம் தெரிவித்தனர். எனது தகப்பனார் இறப்பதற்கு முன்பு 18.06.1998 ல் ராமசாமிக்கு 2 ஏக்கர் 88 செண்டும் க.ச 208 காலையில் பழனிசாமிக்கு 2 ஏக்கர் 98 செண்டும், நாச்சப்பனுக்கு க.ச 571/1, 571/2 காலைகளில் 3 ஏக்கர் 26 செண்டும், பரமசிவத்திற்கு க.ச. 208 காலையில் 2 ஏக்கர் மற்றும் க.ச.572 காலையில் 80 செண்டும், க.ச 572/1 3 ஏக்கர் ஆக மொத்தம் 5 ஏக்கர் 80 செண்ட் ஆகிய பூமிகள் எனது தகப்பனார் உயில் மூலம் எழுதிகொடுத்தார். நாச்சப்பனுக்கு 1998 ல் எழுதிய உயிலை 2002 ல் எனது தகப்பனார் ரத்து செய்துவிட்டார். அடிக்கடி எனது தகப்பனாருடன் சண்டையிட்டு வந்ததால் ரத்து செய்துவிட்டார். பரமசிவத்திற்கு 15.07.2000 ல் எனது தகப்பனார் உயில் எழுதிவைத்தார். எனது தகப்பனார் நாச்சப்பனுக்கு எழுதி வைத்த உயில் ஆவணத்தை ரத்து செய்து விட்டதால் நாச்சப்பன் கோபமடைந்து ஆள் மாராட்டம் செய்து 3 உயில்கள் எழுதிவிட்டார் (உயில் எண்கள்.83,84,85). பிறகு 2009 ல் மற்றொரு உயில் எண்.8 எழுதிவிட்டார். அந்த உயிலிகளில் உள்ளது எனது தகப்பனாரின் கைரேகைகள் அல்ல. எனக்கு ஒதுக்கிய சொத்து ராமசாமி, பழனிசாமி, பரமசிவம் ஆகியோருக்கு எழுதிவைத்த சொத்துக்கள் தவிர மீதமுள்ள சொத்துகளை 9 ஆக பிரித்து 1 பாகம் எனக்கு கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நாச்சப்பனுக்கு சரஸ்வதி என்ற மனைவியும், தமிழ்செல்வன் என்ற மகனும், மைதிலி என்ற மகளும் வாரிசுகளாவார்கள். நாச்சப்பன் மனைவி, மகன் மற்றும் மகள் ஆகியோர் பெயரில் எழுதிகொடுத்துள்ள பத்திரங்கள் அனைத்தும் பொய்யானவையாகும். தமிழ்செல்வன் மற்றும் சரஸ்வதி ஆகியோர் சஞ்சய் அகர்வால் விகரம்குமார் மற்றும் வினோத்குமார் ஆகியோருக்கு எழுதி கொடுத்த பத்திரங்கள் அனைத்தும் பொய்யானவை. மைதிலி Bank of India க்கு (18 ம் பிரதிவாதி) எழுதிகொடுத்த அடமானபத்திரம் அனைத்தும் செல்லதக்கதல்ல.

அசல் வழக்கு **609/2022** ல் **8** முதல் **10** பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரனை**:-**

எனக்கு கணபதிபாளையம் கிராமத்தில் 2 ஏக்கர் 7 ½ செண்ட் பூமியை எனது தகப்பனார் ஒதுக்கினார் என்று நான் சொல்கிறேன். அதுக்கு எழுத்துபூர்வமான ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். எனது தாய்மாமன் மக்கள் செல்லப்பன் மற்றும் பரமசிவம் முன்னிலையில் பேசி பூமிகள் ஒதுக்கப்பட்டது. 2 ஏக்கர் 7 ½ நீலியாக ஒரே இனமாக உள்ளது. அதில் 572/1 ல் பூமியின் அகலம் கிழமேல் 110 அடி, நீளம் தென்வடல் சுமார் 350 அடி இருக்கும். க.ச 573 காலையில் உள்ள பூமியின் அகலம் சுமார் 110 அடி, நீளம் சுமார் 260 அடி இருக்கும், க.ச 218/5 காலையில் பூமியின் அகலம் 75 அடி, நீளம் சுமார் 260 அடி இருக்கும். இந்த பூமிக்கு செக்குபந்தி சொல்லமுடியுமா என்றால் முடியும். க.ச 572/1 காலை 40 செண்ட் பூமிக்கு செக்குபந்தி கிழமேல் வண்டி தடத்திற்கும் வடக்கு; ராமசாமி பூமிக்கு மேற்கு; சுப்பைய கவுண்டர் பூமிக்கும் கிழக்கு; பிஏபி வாய்க்காளுக்கும் தெற்கு மற்றும் க.ச 573 காலையில் 1 ஏக்கர் 17 ½ பூமிக்கு செக்குபந்தி; பிஏபி வாய்க்களுக்கும் வடக்கு; ராமசாமி பங்கிற்கும் மேற்கு; என்னுடைய பங்கிற்கும் கிழக்கு; 218/5 காலையில் சின்னராசப்பகவுண்டர் பூமிக்கும் தெற்கு. பின்னும் 218/5 காலையில் 0.45 செண்ட் பூமிக்கு செக்குபந்தி; சின்னராசகவுண்டர் பூமிக்கும் வடக்கு; ராமசாமி பூமிக்கும் மேற்கு; சின்னசாமி பூமிக்கும் கிழக்கு; தென்வடல் வண்டிதடத்திற்கும் தெற்கு; என அமைந்துள்ளது. இவையெல்லாம் பிஏபி பாசனம் கொண்ட தோட்ட பூமிகளாகும். மேற்படி பூமிகளில் சாளை மற்றும் கிணறு ஏதுமில்லை. இந்த பூமிக்கு எனது பெயரில் தனியாக பட்டா இல்லை. எனது தகப்பனார் பெயரில் உள்ளது. எனது தகப்பானார் 1979 ஆம் வருடம் ஜனவரி மாதம் செல்லப்பன், பரமசிவம் ஆகியோர் முன்னிலையில் ஏற்பட்ட ஏற்பாட்டின் படி எனக்கு 2.7 ½ பூமியை தனியாக பிரித்து கொடுத்தார் என சொல்வது தவறு என்றால் சரியல்ல. எனது தகப்பனார் எனக்கு கொடுக்கவேண்டும் என்று நினைத்து இருந்தால் பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்திருப்பார் என்றால் சரியல்ல. நான் தனிப்பட்ட முறையில் மேற்படி எனக்கு ஒத்க்கபட்ட

சொத்துகளை அனுபவித்து வருகிறேன் என்று சொல்வது தவறு என்றும் சொத்துக்கள் பொதுவில் தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. தனியாக பத்திரம் எழுதி கொடுக்காததாலும் பட்டா என் தகப்பனார் பெயரில் இருந்து வருவதாலும் சொத்துக்கள் பொதுவில்தான் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஒதுக்கப்பட்டதாக சொல்லும் சொத்து குறித்து தனியாக பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்ய வில்லை என்றால் சரிதான். எனக்கு ஒதுக்கபட்டதாக சொல்லும் சொத்தில் என் தகப்பனாரின் வாரிசுகள் அனைவருக்கும் குறிப்பாக 8 முதல் 10 பிரதிவாதிகளுக்கும் சேர்த்து சட்டபடி பாகம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. அதுகுறித்து சகோதரிகள் எதிர் கோரிக்கை பரிகாரம் கேட்டுள்ள நிலையில் அதனை பெற தகுதியுடையவர்கள் என்று சொன்னால் சரியல்ல. வீடு மற்றும் காலியிடம் மொத்தம் 6 செண்ட் கவுண்டம்பாளையம் ஊர் நத்தத்தில் உள்ளது. அந்த வீட்டில் நான் தான் குடிவைத்துள்ளேன். சுமார் 200 வருட பழைமையான வீடு. அந்த வீட்டின் பட்டா எனது தகப்பனார் பெயரில் உள்ளது. அந்த வீடு என்னுடைய தனிப்பட்ட சுவாதீன அனுபவத்தில் இல்லை என்றும் அனைத்து வாரீசுகளின் பொது சுவாதீனத்தில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. என் பெயரில் தனிபட்டா ஏற்படாத காரணத்தால் என் சுவாதீனத்தில் இருப்பதாக கூறுவது தவறு என்றால் சரியல்ல. வீட்டை பொருத்தும் எனது தகப்பனாரின் வாரிசுகள் பாகம் உள்ளது என்றும் கூட்டுசுவாதீனத்தில் உள்ளது என்றும் 8 முதல் 10 பிரதிவாதிகள் எதிர் கோரிக்கை செய்துள்ள நிலையில் மேற்படியாருக்கு அந்த பரிகாரமும் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

அசல் வழக்கு **609/2022**ல் **3,4,5** பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரனை**:-**

நான் 5-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். செல்லப்பன், பரமசிவம் முன்னிலையில் என் தகப்பனார் சொத்து ஒதுக்கியதாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள நிலையில் அந்த விவரத்தை வழக்குரையில் குறிப்பாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அவர்கள் இருவரும் என்னுடைய தாய்மாமா மக்கள். நான் கூறுவது போல் எனது தகப்பனார் எந்த வித சொத்தையும் மேற்படியார்கள் முன்னிலையில் ஒதுக்கவில்லை என்றும் நான் சொல்லுவது தவறானது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் ஒதுக்கியதாக சொல்லும் சொத்தை தற்போதுள்ள நிலையில் விற்க முடியுமா என்றால் முடியாது. எனக்கு ஒதுக்கியதாக சொல்லும் சொத்திற்கு பத்திரம் எதுவும் கிடையாது. கடந்த 40 ஆண்டு காலமாக நான் அனுபவித்து வரும் சொத்திற்கு கந்தாயம் ஏதேனும் கட்டியுள்ளேனா என்றால் இல்லை. இந்த சொத்திற்கு என் பெயரில் தனியாக பட்டா ஏதும் இல்லை. நான் இதுவரை என் பெயரில் தனியாக சொத்து எதுவும் வாங்கவில்லை. 100 ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள சொத்தினை வாங்கவேண்டும் என்றால் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியும். கணபதிபாளையம் கிராமம், கவுண்டம்பாளையத்திலுள்ள வீட்டிற்கு பட்டா என் தகப்பனார் பெயரில் உள்ளது. அந்த சொத்த பொருத்து எனது தகப்பனார் இறக்கும் வரை எந்த ஆவணமும் எழுதி வைக்க வில்லை என்றால் சரிதான். சின்னராசப்பகவுண்டர் எந்த ஒரு ஆவனமும் எழுதி வைக்காமல் காலம் சென்றுவிட்ட நிலையில் அவரது வாரிசுகள் எல்லோருக்கும் பாகம் உள்ளது என்றால் சரி ஆனால் நான் 40 ஆண்டு காலமாக அனுபவித்து வருகிறேன். 10.10.2008 Ex.B5 முதல் 8 வரை ல் உள்ளது எனனுடைய தந்தையின் போட்டோதான். எனது தந்தையின் போட்டோவை எடுத்து சென்று ஆள் மாறாட்டம் செய்து கைரேகை வைக்கப்பட்டுள்ளது. என் தகப்பனாரின் கைரேகையல்ல போலியாக தயார் செய்யப்பட்டுள்ளது. Ex B.5 to 8 ஆகிய ஆவணங்கள் எனது தம்பி போலியாக ஏற்படுத்தபட்ட விவரம் எப்போழுது எனக்கு தெரியும் என்றால் என் தந்தை இறந்த பிறகு 2012 ஆம் வருடம் எனக்கு தெரியும். Ex B.5 to 8 ஆகிய ஆவணங்கள் தவறாக ஏற்படுத்த பட்டது தெரிவித்து காவல் நிலையத்தில் நடவடிக்கை எடுக்ககோரி புகார் எதுவும் கொடுக்கவில்லை. Ex B.5 to 7 ஒரே தேதியிலும் Ex B.8 மற்றொரு தேதியிலும் எழுதப்பட்டது என்றால் சரிதான். மேற்படி உயில் சாசனங்களில் யார் யார் சாட்சி கையொப்பங்கள் செய்துள்ளார்கள் என்பது தெரியுமா என்றால் எனக்கு நினைவில்லை. எனது தம்பி என் தந்தையை Ex B.5 to 8 ஆவணங்களை ஏறபடுத்திய விபரம் 2012 ஆம் ஆண்டு தெரிந்துள்ள நிலையில் மேற்படி ஆவணங்களில் 5 முதல் 7 வரை 06.09.2022 ஆம் தேதியில் நகல் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரிதான். ஆனால் அதற்கு முன்பு 2012ம் ஆண்டு நகல் பெற்றுள்ளேன். Ex B. 8 16.07.2020ல் எடுத்துள்ளேன் என்றால் 2012லேயே எடுத்துள்ளேன். 2012ம் ஆண்டு எடுத்த ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. Ex B.9 01.09.2022ல் நகல் எடுத்துள்ளேன் என்றால் சரிதான் அதற்கு முன்பே 2014ல் எடுத்துள்ளேன். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரியல்ல. Ex B.10 01.09.2022 தேதியில் நகல் எடுக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு நினைவில்லை. Ex B.11ல் கிரையம் பெற்ற நபர்கள் எனக்கு யாரென்று தெரியாது. மேற்படியார்கள் தமிழ்செல்வனுக்கு திரும்பவும் எழுதி கொடுத்துவிட்டார்கள். Ex B.5 to 8 வரை உள்ள ஆவணத்தில் கண்ட சொத்துகளைதான் தமிழ்செல்வன் 11 முதல் 17 வரை உள்ள பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் மேறபடி ஆவணங்கள் மோசடியாக ஏற்படுத்தப்பட்டதால் கிரையங்கள் செல்லத்தக்கதல்ல. 18ம் பிரதிவாதிக்கு எழுதிகொடுக்கப்பட்டுள்ள ஆவணமும் செல்லதக்கதல்ல. Ex B.18 படி மூன்றாம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்த செட்டில்மெண்ட் ஆவணமும் செல்லத்தக்கதல்ல. நாச்சப்பனுடைய வாரிசுகள் 3 முதல் 5 பிரதிவாதிகள் Ex B.11 முதல் 17 வரை எழுதிகொடுத்த ஆவணங்கள் குறித்து கிரையம் பெற்ற நபர்கள்

அல்லது 3 முதல் 5 பிரதிவாதிகள் மீது புகார் ஏதும் காவல் நிலையத்தில் குடுத்துள்ளீர்களா என்றால் செல்லாத சொத்து என்பதால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. உரிமையில்லாத நபர் ஒரு சொத்தை மோசடியாக உரிமை மாற்றம் செய்து கொடுத்தால் அந்த ஆவணத்தை மாவட்ட பதிவாளர் ரத்து செய்ய அதிகாரம் உள்ளது என்றால் சரிதான். Ex B.5 to 8 சம்மந்தமாக மாவட்ட பதிவாளரிடம் ரத்து செய்ய கோரி மனு கொடுக்கவில்லை மாறாக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். Ex B.19 முதல் 22 வரை ஆவணங்களில் என்னுடைய பெயரில்லை மேற்படி ஆவணங்கள் போலியானவை. சாந்தி என்பவர் சகோதரர் பரமசிவத்தின் மனைவி ஆவார். 3 முதல் 5 பிரதிவாதிகள் நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் என்ன எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு சொத்தில் உரிமை இல்லை சொல்லியுள்ளார்கள். நான் உரிமையிருப்பதாக கூறுகிறேன். சாந்தி O.S No.221/2024 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளார்கள் என்றால் சொத்து எனக்கு வேண்டும் என்று பரிகாரம் கேட்டுள்ளார். எனக்கு ஒதுக்கியதாக கூறிய சொத்துக்களுக்கு செக்குபந்தி பற்றி கூறியுள்ள நிலையில் அதற்கு எழுத்துபூர்வமான ஆதாரம் உள்ளதா என்றால் நான் வாய்மொழியாக கூறியதுதான் ஆதாரம். எனது தகப்பனார் இரண்டு நபர்கள் முன்னிலையில் சொத்துக்களை எனக்கு ஒதுக்கியதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் கூறுவது உண்மையென்றால் 2012 லேயே வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றால் என் சகோதரிகள் வழக்கு தாக்கல் செய்தார்கள். O.S No.221/2024 வழக்கில் எனது தகப்பனாரை எனது சகோதரர் நாச்சப்பன் ஏமாற்றி போலியாக உயில் ஆவணங்கள் செய்துவிட்டார் என்ற விபரத்தை மேற்படி வழக்கில் சாந்தி தெரிவித்துள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விபரம் அனைத்தும் எனக்கு தெரியும். வழக்கில் 8 முதல் 10 வரையான பிரதிவாதிகள் எனது சகோதரிகள். எனது தகப்பனார் உரிமை மாற்றம் செய்து கொடுக்காத சொத்துகளை பொறுத்து 3 முதல் 5 மற்றும் 8 முதல் 10 ஆகிய பிரதிவாதிகள் பாகம் பிரித்து கொடுக்ககோரி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் என் தகப்பனார் எழுதிகொடுத்த சொத்துக்கள் அவரவர்களுக்கு பாத்தியப்பட்டது மாறாக போலியாக ஏற்படுத்தப்பட்ட ஆவணங்களில் கண்ட சொத்துக்களை பொருத்து அனைவருக்கும் பாகம் உள்ளது மேலும் எனக்கு ஒதுக்கிய 2 ஏக்கர் 7 ½ செண்ட் பூமியும் வீடும் எனக்கு பாத்தியப்பட்டது. எனக்கு ஒதுக்கப்பட்ட பூமி மற்றும் வீடு குறித்து விலம்புகை பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் எனக்கு பாத்தியப்பட்டது என கூறியுள்ளேன். நான் எனக்கு ஒதுக்கப்பட்ட பூமி மற்றும் வீடு குறித்து விலம்புகை பரிகாரம் வழக்கில் கோரியுள்ளேனா என்றால் கோரியுள்ளேன். எனது தந்தை வாய்மொழியாக ஒதுக்கிய சொத்திற்கு என்ன மதிப்பீடு செய்துள்ளேன் என்றால் மதிப்பு போட வில்லை. நீதிமன்ற கட்டனம் என்ன செலுத்தப்பட்டுள்ளது என்று எனக்கு நினைவில்லை. நான் தக்கல் செய்துள்ள வழக்குரை ஆங்கிலத்தில் தட்டச்சி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் அதனை எனக்கு படித்து காண்பித்தார்கள். நான் சொல்லுவது போல் எனக்கு சொத்தில் உரிமையிருப்பதாக வழக்குரையில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. எனது தந்தையை எனது சகோதரர் நாச்சப்பன் ஆள் மாராட்டம் செய்து மோசடியாக என் தந்தையின் கைரேகையை வைத்து புகைபடத்தை ஒட்டி போலியாக உயில் ஆவணங்கள் தயார் செய்துள்ளது குறித்து அதனை நிரூபனம் செய்ய கைரேகை நிபுனருக்கு அனுப்பி பரிசோதனை செய்திட நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் எடுத்துள்ளேன். நான் சொல்வது போல் எந்த வித நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் பொய்யாக நடவடிக்கை எடுத்ததாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எனது தந்தை சமரசத்தின் மூலம் வாய்மொழியாக ஒதுக்கிய சொத்தையும் வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் சேர்த்துள்ளேன். எனது தகப்பனார் எழுதிகொடுத்ததாக தெரிவிக்கும் Ex B.5 முதல் 8 வரை ஆவணங்கள் உண்மையானது என்றும் அதனடிப்படையில் Ex B. 9 முதல் 18 வரை ஏற்பட்ட ஆவணங்கள் உண்மையானவை என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் ஏதும் எனக்கு கிடக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. மேலும் 2012 ம் ஆண்டு மேற்படி போலியான ஆவணங்கள் ஏற்படுத்தப்பட விபரம் எனக்கு தெரிந்ததாக கூறியுள்ள நிலையில் 2022 ம் ஆண்டு தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. சகோதரிகள் ஏற்கனவே வழக்கு தக்கல் செய்திருந்தனர். என் சகோதரிகள் தாக்கல் செய்த O.S No.280/2024 வழக்கு திரும்பப் பெறப்பட்டுவிட்டது என்று சொன்னால் சரிதான்.

அசல் வழக்கு **609/2022** ல் **16,17** பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரனை**:-**

சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவணத்தை பதிவு செய்ய செல்லும் சமயம் சம்மந்தப்பட்ட சார் பதிவாளர் ஆவணத்தை பதிவு செய்யும் நபரின் புகைபடத்தையும் அந்த சம்மந்தப்பட்ட நபரையும் ஒப்பீடு செய்து ஆவணத்தை பதிவு செய்வார் என்றால் Ex.B.5 to 8 ஆவணங்கள் அவ்வாறு பதிவு செய்யப்படவில்லை. Ex.B.5 to 8 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்ட சமயம் நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் இல்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் போலி ஆவணம் ஆள் மாராட்டம் செய்து பதிவு செய்யப்பட்டிருந்தால் சம்மந்தப்பட்ட சார் பதிவாளரிடம் குற்ற நடவடிக்கை கோரி புகார் செய்ய முடியும் என்றால் நான் செய்துள்ளேன். நான் புகார் கொடுத்தது சம்மந்தமாக எந்த வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். Ex.B 5 to 8

ஆவணங்கள் உண்மையானவை என்றும் நான் சொத்தை அபகரிக்க பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 16 மற்றும் 17 பிரதிவாதிகள் முறையாக கிரயம் பெற்றுள்ளார்கள் என்றும் சொத்துக்கள் மேற்படியார் சுவாதீனத்தில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. சொத்துக்கள் யாருடைய சுவாதீனத்திலும் இல்லை.

(3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரனை செய்த பிற சங்கதிகளை பொறுத்து 16, 17ம் பிரதிவாதி ஏற்றுக்கொள்கிறார்கள்.)

19ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரனை இல்லை.

மேற்படி சாட்சியம் என்னால் மடிக்கனினியில் பதிவு செய்யப்பட்டு பின்னர் ப்ரிண்டரில் ப்ரிண்ட் எடுக்கப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு 09.08.2025 தேதியில் கையொப்பம் செய்தார்.

*Sd/-M.E.Padma,*

**I Additional District and Sessions Judge,**

**Tiruppur.**